மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S. No. 164/2021

**வாக்குமூலம்: வா.சா.1 – ரத்தினசாமி**

**27.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வழக்கு சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தந்தை எனது அத்தைக்கு எழுதி கொடுத்தார்கள். பிறகு எனது அத்தை எனது அப்பாவுக்கு உயில் மூலம் எழுதிக் கொடுத்தார்கள். பிறகு நான் அனுபவித்து வருகிறேன். எனது அத்தை பெயர் பவலாயிஅம்மாள் ஆகும். பவலாயிஅம்மாளுடைய அப்பா பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பவலாயிஅம்மாளுடைய அப்பாவுக்கு இருதாரமா என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பாவுடைய தந்தைக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர் என்றாலும், அதில் மூத்த மனைவியின் மகன் எனது தந்தை என்றாலும் இளைய மனைவின் மகள் தான் பவலாயிஅம்மாள் என்றாலும் தெரியாது.

2. எனது தகப்பனாருடைய அப்பா பெயர் நந்தப்பக்கவுண்டர் ஆகும். பவலாயிஅம்மாள் எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரி என்றால் தெரியாது. பவலாயிஅம்மாள் உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தேதியில் பவலாயிஅம்மாள் அவர்களின் வயது எத்தனை இருக்கும் என்றால் சுமார் 70, 80 இருக்கும். பவலாயிஅம்மாளுக்கு திருமணமாகி எத்தனை குழந்தைகள் உள்ளனர் என்றால் அவருக்கு இரண்டு மகன்கள் மட்டும் இருந்தனர். தற்போது அவர்கள் இறந்விட்டார்கள். அவர்களுடைய பெயர் என்ன என்றால் தெரியாது. அந்த மகன்களுக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். உயிலில் பவலாயிஅம்மாள் அவர்களின் மகன்களோ, பேரன்களோ கையெழுத்து போடவில்லை என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது.

3. பவலாயிஅம்மாள் யாருடைய பராமரிப்பில் இருந்து வந்தார்கள் என்றால் அதுப் பற்றி எனக்குத் தெரியாது. எனது தந்தை அவர்கள் வீட்டிற்கு சென்று வருவார். அப்போது எனக்கு 5 வயது தான் இருக்கும். நானும், எனது தகப்பனாரும் பவலாயிஅம்மாள் அவர்களை யாரும் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தேதியில் பவலாயிஅம்மாள் அவர்களுக்கு 55 வயது தான் என்றாலும், அதனால் அவரை பராமரிப்பதற்கு யாருடைய உதவியும் தேவையில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தேதியில் பவலாயிஅம்மாள் அவர்களுக்கு மகன்களும், பேரன்களும் உயிருடன் இருந்ததால் எனது தகப்பனாருக்கு

பவலாயிஅம்மாள் உயில் எழுதி வைக்க அவசியமில்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.1ன் எனது தகப்பனாரின் மூத்த தாரத்தின் மகனாகிய கந்தசாமி கவுண்டரின் மகன் காளியப்பகவுண்டர் என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், எனது தாத்தா பெயர் கந்தப்பகவுண்டர் என்று சொல்லப்படவில்லை என்றாலும், அதுப் பற்றி எனக்குத் தெரியாது. நான் வழக்கிற்கு ஆதரவாக எனது தாத்தா பெயர் கந்தப்பகவுண்டர் (எ) கந்தசாமி கவுண்டர் என்று போட்டுள்ளேன் என்றால் இல்லை. கந்தப்பகவுண்டர் அவர்களும் கந்தசாமி கவுண்டர் அவர்களின் ஒரே நபர் தான் என்பதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் போட்டுள்ளேன். வழக்குச் சொத்தின் மதிப்பு ரூ.1,00,380/- என்று எதன் அடிப்படையில் மதிப்பீடு செய்துள்ளேன் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் போடப்பட்டுள்ளது.

5. வழக்கிற்காக வழக்குச் சொத்தின் மதிப்பு குறைவாக மதிப்பீடு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், வழக்குச் சொத்தை பொறுத்து இந்நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றாலும் சரியல்ல. வழக்குச் சொத்தில் 5ஆம் பிரதிவாதியான தனபால் என்ன விவசாயம் செய்து வருகிறார் என்றால் நான் தான் வழக்குச் சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறேன். நான் தான் அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்பதற்கு ஆதரவாக எந்த ஒரு ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சோளம் பயர் செய்து வந்தேன். தற்போது தரிசு நிலமாக உள்ளது. மழை பெய்தால் தான் பயிர் செய்ய முடியும். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் வழக்குச் சொத்து தனபால் அவர்களின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல.

6. நான் எந்த வருடம் என்ன பயர் செய்தேன் என்றால் சோளம், கம்பு ஆகியவை பயிர் செய்தேன் வருடம் ஞாபகமில்லை. நான் சுவாதீனத்தில் இல்லை என்பதால் தான் எந்த வருடம் என்று எனக்கு ஞாபகமில்லை என்றால் சரியல்ல. உயில் எழுதி வைத்ததாக சொல்லப்படும் தேதி எனது தந்தைக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் சுமார் 50 வயதுக்கு கீழ் இருக்கும். எனது தகப்பனார் தான் பவளாயி அம்மாள் அவர்களுக்கு மூத்தவர் என்றால் சரிதான்.

**(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

ஒம்/- சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.